**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**O.S.No.23/2014**

**தேதி : 23.11.2021**

**PW.1 : குமார்**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் 1979ம் வருடம் பிறந்தேன்,எனக்கு 1996ம் ஆண்டு 18 வயது ஆகியிருந்தது, அப்போது நான் 12வது படித்து வந்தேன்.நான் 12வது படித்து முடித்த பிறகு அண்ணாமலை பல்கலைகழகத்தில் B.A சமூகவியல் படிக்க சேர்ந்தேன். நான் டிகிரி படிப்பதற்கு குமாரவலசில் இருந்துதான் போனேன் என்று சொன்னால்,ஆமாம், குமாரவலசிலிருந்து வெளியே போய் தங்கிதான் டிகிரி படித்தேன். நான் 1996ம் ஆண்டு டிகிரி படிப்பதற்கு சேர்ந்து 1999ம் வருடம் டிகிரி படித்து முடித்தேன். நான் டிகிரி முடிக்கும்வரை என் தாய் மற்றும் தந்தையாரின் பராமரிப்பில்தான் வளர்ந்து வந்தேன் என்று சொன்னால், ஆமாம். எங்களுக்குள்ள பூர்வீக சொத்தை நானும், என் அக்கா மகளான 2ம் வாதி கல்பானாவும், என் அப்பாவும் பாகம்பிரித்து கொள்ளவில்லை, அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. பூர்வீக சொத்தை பிரிப்பதற்கு இந்த வழக்கில் நாங்கள் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. இந்த தாவா சொத்தின் கிரயம் என் தயாரான 2ம் பிரதிவாதி லோகாத்தாள் மற்றும் 3ம்பிரதிவாதி சின்னசாமி பெயரில்தான் உள்ளது என்று சொன்னால், ஆமாம். நான் அந்த கிரையப்பத்திரத்தை படித்துப் பார்த்துள்ளேன். இந்த கிரயப்பத்திரத்தில் பூர்வீக சொத்தை விற்று வந்த வருமானத்தை வைத்துதான் இந்த தாவா சொத்து வாங்கப்பட்டது என்று வாசகம் உள்ளதா என்று கேட்டால், அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தாவா சொத்தை நேரடியாக கிரையம் வாங்கினார்களா அல்லது யார் மூலமாவது கிரையம் வாங்கினார்களா என்பது எனக்கு தெரியாது. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 22.04.1996ம் தேதி 4ம் பிரதிவாதி நடராஜனோடு ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதை நான் தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், அது எனக்கு தெரியாது, ஆனால் பின்னர் 2014ம் ஆண்டு அந்த கிரைய

ஒப்பந்தத்தைப்பற்றி நான் தெரிந்து கொண்டேன். அந்தகிரைய ஒப்பந்தத்தில் கிரையத்தொகை எவ்வளவு போடப்பட்டுள்ளது என்று கேட்டால், ரூபாய் 73,000/- கிரையத்தொகை போடப்பட்டுள்ளது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் அட்வான்ஸ் தொகை எவ்வளவு வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால், ரூபாய் 10,000/-மோ,ரூபாய் 15,000/-மோ அட்வான்ஸ் வாங்கியதாக கேள்விப்பட்டேன், ஆனால் எவ்வளவு அட்வான்ஸ் தொகை போடப்பட்டுள்ளது என்பது எனக்கு சரியாக தெரியாது. அந்த கிரைய ஒப்பந்தப்படி 2,3 பிரதிவாதிகள் நடக்காததால் 4 ம்பிரதிவாதி அவர்கள் மீது ஈரோடு, முதலாம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 20/1998 ஐ தாக்கல் செய்ததை நான் தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், 2014 ம் வருடம் அதை நான் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் 2,3 ம் பிரதிவாதிகள் 4 ம் பிரதிவாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று 3.4.1998 ம் தேதி தீர்ப்பானதை நான் தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், தெரிந்து கொண்டேன், ஆனால் அது மோசடியான வழக்கு எங்களை கட்டுப்படுத்தாது. எனக்கு மேற்கண்ட வழக்கின் விவரங்களெல்லாம் முன்பே தெரியும் என்றும், இருப்பினும் இந்த வழக்கிற்காக அந்த விவரங்கள் 2014 ம் ஆண்டுதான் எனக்கு தெரியும் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. 2,3 பிரதிவாதிகள் 4 ம்பிரதிவாதி பெற்ற தீர்ப்பை ரத்து செய்யக்கோரி 2 மனுக்கள் தாக்கல் செய்து அவை இரண்டுமே தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், அதை நான் 2014 ம் ஆண்டுதான் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் இருக்கின்றன என்பதை தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் 4 ம் பிரதிவாதி நடராஜன், 5 ம் பிரதிவாதி பாபு மற்றும் 6 ம் பிரதிவாதி பழனிச்சாமி பெயரில்தான் இருக்கின்றன,ஆனால் நாங்கள் தான் சுவாதீனத்தில் இருக்கிறோம். தாவா சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் இருக்கிறோம் என்பதற்கு என் வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால், ஆமாம், ஆவணம் இல்லை.